# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்:386/பேரூ/2025**
**நாள் : 11.03..2026**

R துரைசாமி,
கல்லப்பாளையம்,
சேலம் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
குன்னத்தூர் பேரூராட்சி,
திருப்பூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், வெள்ளரிவெள்ளி அஞ்சல், கல்லப்பாளையம் என்ற முகவரியைச் சேர்ந்த திரு. R துரைசாமி என்பவரது 15.10.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.10.2025 அன்று பெறப்பட்டு, 386/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், வெள்ளரிவெள்ளி அஞ்சல், கல்லப்பாளையம் என்ற முகவரியை சேர்ந்த திரு. R துரைசாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தனது 15.10.2025 நாளிட்ட புகார் மனுவுடன் இணைத்து அனுப்பியுள்ள 05.03.2025 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளருக்கு சமர்ப்பித்த மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 287 நாள் 05.11.1996-ல் மாநகராட்சி மற்றும் நகராட்சி , பேரூராட்சிகளில் புதிய குடிநீர் திட்டம் தொடங்கப்படும் சமயங்களில், குடிநீர் மேம்பாட்டு திட்டங்கள் தொடங்கப்படும் சமயங்களில் ஒன்று அல்லது இரண்டு பிளம்பர்கள் தான் உரிமம் பெற்றவர்களாக இருக்கிறார்கள் தவிர வீட்டு குழாய் இணைப்புகள் அதிகமாக உள்ள உள்ளாட்சி நிறுவனங்களில் குறைந்த எண்ணிக்கையில் உள்ள உரிமம் பெற்ற பிளம்பர்களால் பொதுமக்களுக்கு உடனடியாக சேவைகளை செய்து கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. மேலும் பொதுமக்கள் தாங்கள் விரும்பும் நபர்கள் மூலம் இச்சேவையினை நிறைவேற்றுவதற்கு வசதியாக ஒரு புதிய முறையை அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் ஓராண்டு கால அளவிற்கு நடைமுறைப்படுத்தி அதன் அடிப்படையில் இம்முறையை தொடரச் செய்யலாம் என அரசு முடிவு செய்துள்ளது.

இந்த புதிய முறையை அமுல்படுத்துவதற்கு முன் தேவை இருப்பின் துணை விதிகளுக்கு திருத்தங்கள் அனைத்து உள்ளாட்சி மன்றங்களில் ஒப்புதல் பெற்று அதன் பிறகு இந்த புதிய முறையை நடைமுறைக்கு கொண்டு வரவேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறது என கூறப்பட்டுள்ளது. இந்த அரசாணையில் பிளம்பர் உரிமங்கள் கொடுக்கக்கூடாது, உரிமம் பெற்ற பிளம்பர்கள் பணிகள் செய்யக்கூடாது என கூறப்படவில்லை. இந்த அரசாணையை தமிழ்நாடு பிளம்பர்கள் சங்கம், 16.12.1996-ல் சென்னை உயர்நீதிமன்றத்தில் தடை ஆணை பெற்றது. மீண்டும் பிளம்பர் உரிமங்கள் வழங்கி உரிமம் பெற்ற பிளம்பர்களே இன்று வரை பணிகள் செய்து கொண்டு வருகிறோம்.

இந்த நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையரின் 14.02.2006ன் சுற்றறிக்கையில் இந்த அரசாணையில் மேற்கோள் காட்டப்பட்டதில் ஒரு முறையை அறிமுகப்படுத்தி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இது ஒரு வருட காலத்திற்கு ஒரு சோதனை நடவடிக்கையாக ஒப்படைக்கிறது என்பதை மதிப்பாய்வு செய்யப்பட்டது மற்றும் இந்த அரசாணையை உரிமம் பெற்ற பிளம்பர்களுக்கு ஆதரவாக நீதிமன்ற தடை உத்தரவு பெற்றுள்ளதால் பழைய முறையே தொடரலாம் எனவும், நுகர்வோர் விருப்பமான உரிமம் பெற்ற பிளம்பர்களை தேர்ந்தெடுத்து இணைப்புகள் வழங்கும் முறையை எளிமைப்படுத்தப்பட வேண்டுமென்றும் மற்றும் இந்த சுற்றறிக்கையை தவறாமல் ஒப்புக்கொள்ளப்பட வேண்டுமென சுற்றறிக்கையில் உத்திரவிடப்பட்டுள்ளது.

மேலும் சென்னை உயர்நீதிமன்றம் (தீர்ப்பு) ஆணை நாள் 10.03.2006-ல் உள்ளாட்சி நிறுவனங்களில் பிளம்பர் உரிமம் வழங்கவும், உரிமம் பெற்ற பிளம்பர்கள் பணிகள் செய்யவும் எந்த தடையும் இல்லையெனவும், இந்த அரசாணை சோதனை அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு மட்டுமே என்று சமர்ப்பிக்கப்பட்டது மற்றும் இந்த காலம் ஏற்கனவே முடிந்துவிட்டது. எனவே இந்த வழக்கு எதுவும் பிழைக்கவில்லை. மற்றும் இந்த வழக்கில் உள்ள பிரார்த்தனை பயனற்றதாகிவிட்டது. இந்த அரசாணையில் கூறப்பட்ட உத்தரவுகள் ஒரு வருட காலத்திற்கு மட்டுமே வெளியிடப்பட்டிருப்பதை கருத்தில் கொண்டு தீர்ப்பு தேவையில்லை என்று வழக்கை தள்ளுபடி செய்யப்படுகிறது. இந்த வழக்கு முற்றாக்கப்பட்டது என (தீர்ப்பு) உத்தரவிடப்பட்டுள்ளது. மற்றும் இன்று வரை உரிமம் பெற்ற பிளம்பர்களே பணிகள் செய்து வருகிறோம். மற்றும் சேலம் மாநகராட்சி, தாரமங்கலம் நகராட்சி, சங்ககிரி பேரூராட்சிகளில் பிளம்பர் உரிமங்கள் பெற்று பணிகள் செய்து வருகின்றேன்.

தற்போது திருப்பூர் மாவட்டம், குன்னத்தூர் பேரூராட்சியில் பிளம்பர் உரிமம் வேண்டி 07.02.2025-ல் விண்ணப்பித்துள்ளேன். இந்த பிளம்பர் உரிமம் வழங்க மறுக்கிறார்கள். ஆகவே இந்த பிளம்பர் உரிமம் வழங்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 20.11.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் குன்னத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. குன்னத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. ரா. பாலசுப்பிரமணி என்பவர் தனது 12.12.2025 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 188(2)/2025-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

திருப்பூர் மாவட்டம், குன்னத்தூர் பேரூராட்சியில் வீடுகள், தொழிற்சாலைகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. திரு. இரா. துரைசாமி, கல்லப்பாளையம், வெள்ளரிவெள்ளி (அஞ்சல்), எடப்பாடி, சேலம் மாவட்டம் என்பவர் தான் ஏற்கனவே சேலம் மாநகராட்சி, தாரமங்கலம் நகராட்சி மற்றும் சங்ககிரி பேரூராட்சிகளில் பிளம்பர் உரிமம் பெற்று, பிளம்பர் வேலை செய்து வருவதாகவும், குன்னத்தூர் பேரூராட்சியில் பிளம்பர் உரிமம் வேண்டி விண்ணப்பம் அளித்துள்ளார்.

குன்னத்தூர் பேரூராட்சியில், தலைவர் முதல் வார்டு உறுப்பினர்கள் அனைவரும், வெளி நபர்களுக்கு குடிநீர் இணைப்புகள் தருவதற்கு முன்வரவில்லை. மேலும் உள்ளூரில் உள்ள குடிநீர் பராமரிப்பு பணி செய்யும் பணியாளர்களை கொண்டே இணைப்புகள் வழங்கலாம் என மன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒப்புதல் அளித்துள்ளனர். மேலும் இவர்கள் யார் என்று பொதுமக்களுக்கு தெரிவதில்லை, இவர்களுக்கு பணம் கொடுத்து ஏமாற்றினால் யார் பொறுப்பு என்று கேள்வி எழுப்புகின்றனர்.

மேலும் குன்னத்தூர் பேரூராட்சியில், மனுதாரருக்கு பிளம்பர் உரிமம் வழங்காததால் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் தனக்கு பிளம்பர் உரிமம் வழங்குமாறும், மேலும் சில கேள்விகளை கேட்டு தொடர்ந்து புகார் மனு அளித்துள்ளார். மனுதாரர் அனுப்பிய கேள்விகளுக்கு உரிய காலக்கெடுவிற்குள் செயல் அலுவலர் மூலம் பதில் அனுப்பப்பட்டது. மேலும் குன்னத்தூர் பேரூராட்சியில் பொதுமக்கள் எவரும் குடிநீர் பிரச்சனை குறித்து இதுவரை எந்த ஒரு புகார் மனுவும் அளிக்கவில்லை.

குன்னத்தூர் பேரூராட்சியில் குடிநீர் இணைப்பு பெறுபவர்களுக்கு சாலை பராமரிப்பு கட்டணம், மேற்பார்வை கட்டணம் இளநிலை பொறியாளரின் மதிப்பீட்டின்படி கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. மேலும் ஆண்டுதோறும் சாலை பராமரிப்பு கட்டணம் 10 (பத்து சதவீதம்) உயர்வு செய்யப்பட்டு வசூலிக்கப்படுகிறது. இதனால் பேரூராட்சிக்கு எவ்வித வருவாய் இழப்பும் ஏற்படவில்லை. இது குறித்து பொதுமக்கள் எவரும் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கப்படவில்லை. குன்னத்தூர் பேரூராட்சியில் குடிநீர் இணைப்பு வழங்குவதால் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை என்பதையும், மேலும் இவருக்கு குடிநீர் இணைப்பு பணிக்கான பிளம்பர் உரிமம் கொடுப்பதற்கு பேரூராட்சி மன்றம் மற்றும் பொதுமக்கள் யாரும் முன்வரவில்லை எனவும், மேற்படி மனுதாரர் காழ்ப்புணர்ச்சி காரணமாக புகார் மனு தொடர்ந்து அளித்து வருகிறார் என்பதையும் தங்களுக்கு மேலான கவனத்திற்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்." என்று தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான குன்னத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை 07.01.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 22.12.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரான திரு. R துரைசாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 07.01.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- நான் சேலம் மாநகராட்சி, தாரமங்கலம் நகராட்சி மற்றும் சங்ககிரி பேரூராட்சிகளில் பிளம்பர் உரிமங்கள் பெற்று புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்து வருகிறேன். இந்நிலையில், மேற்காணும் பணிகளை திருப்பூர் மாவட்டம், குன்னத்தூர் பேரூராட்சியில் மேற்கொள்வதற்கு எனக்கு பிளம்பர் உரிமம் வழங்குமாறு கோரியதில் பேரூராட்சி செயல் அலுவலர் பிளம்பர் உரிமம் வழங்க மறுப்பு தெரிவித்துள்ளார்.
- நகராட்சி நிர்வாக ஆணையரின் 14.02.2006 நாளிட்ட Roc எண். 7194/2002/ WS2-ல் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின்படி எனக்கு குன்னத்தூர் பேரூராட்சியில் பிளம்பர் உரிமம் வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் " என்று தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான குன்னத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் 07.01.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- சேலம் மாவட்டத்திலுள்ள மாநகராட்சி, தாரமங்கலம் நகராட்சி மற்றும் சங்ககிரி பேரூராட்சியில் பிளம்பர் உரிமம் பெற்று பணிகள் செய்து வரும் மனுதாரர் திருப்பூர் மாவட்டத்திலுள்ள குன்னத்தூர் பேரூராட்சியில் குடிநீர் இணைப்பு பணிகள் மற்றும் பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொள்ள பிளம்பர் உரிமம் கோரியுள்ளார்.

- குன்னத்தூர் பேரூராட்சி பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கருத்துக்களின் அடிப்படையில், வெளியூரில் வசிக்கும் பிளம்பர்களுக்கு புதிய குடிநீர் இணைப்புகள் வழங்கினால் முறைகேடுகள் அதிகம் ஏற்பட வாய்ப்பு இருக்கும் என்பதால், பொதுமக்கள் நலன் கருதி குன்னத்தூர் பேரூராட்சியில் வருடாந்திர ஒப்பந்தப்புள்ளியின் அடிப்படையில் குடிநீர் பழுது பார்க்கும் பணியினை மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரர்களுக்கு மட்டுமே புதிய குடிநீர் இணைப்பு வழங்கும் பணியினை மேற்கொள்ள அனுமதிக்காக பேரூராட்சி மன்றத்தில் பொருள் வைக்கப்பட்டது.

- இந்நிலையில், குன்னத்தூர் பேரூராட்சியில் புதியதாக பிளம்பர் உரிமம் அனுமதி கேட்டு அதிகப்படியான விண்ணப்பங்கள் வருவதால், அனைவருக்கும் புதிய குடிநீர் இணைப்பு பணியினை மேற்கொள்ள மற்றும் பிளம்பர் உரிம அனுமதி வழங்க இயலாத சூழ்நிலை இருப்பதால், பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கருத்துக்களின் அடிப்படையிலும் மற்றும் மன்ற உறுப்பினர்களின் ஒருமித்த கருத்துக்களின் அடிப்படையிலும் குடிநீர் குழாய் பழுதுபார்க்கும் பணியில் குடிநீர் வழங்கல் உப விதிகளின்படி பொதுமக்கள் அவர்களது சொந்த செலவில் புதியதாக குடிநீர் இணைப்பு பணியினை செய்து கொள்ளலாம் என உள்ளதால், பொதுமக்களின் சொந்த செலவில் குடிநீர் இணைப்பு பணியினை செய்து முடிக்கலாம் என பேரூராட்சி மன்றத்தினால் முடிவு செய்து தீர்மானம் நிவேற்றப்பட்டது. (தீர்மான எண். 179/2025 நாள்: 23.12.2025)

- குன்னத்தூர் பேரூராட்சி பொதுமக்கள் தங்களின் விருப்பத்தின் அடிப்படையில் பிளம்பர்களை நியமனம் செய்து படிவம் 'ஆ' மூலம் இப்பேரூராட்சியில் சமர்ப்பிக்கும் காரணத்தினாலும் மற்றும் மேற்காணும் தீர்மானத்தின் அடிப்படையில், பேரூராட்சி அலுவலகத்தால் எந்த நபருக்கும் பிளம்பர் உரிமம் வழங்க வழிவகை எழவில்லை. இந்நிலையில் மனுதாரர் திரு. துரைசாமி என்பவருக்கு பிளம்பர் உரிமம் வழங்க இயலவில்லை எனவும், இதில் எவ்வித உள்நோக்கமும் இல்லையென்பதையும் இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

7. இதற்கிடையில் குன்னத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 13.02.2026 நாளிட்ட அறிக்கை ந.க. எண். 188/2026-ல் மனுதாரரின் முறையீடு மனு குறித்து தனது கூடுதல் விளக்கத்தை கீழ்க்கண்டவாறு அளித்துள்ளார்.

திருப்பூர் மாவட்டம், குன்னத்தூர் பேரூராட்சியில் கடந்த 15 வருடங்களாக புதிய குடிநீர் இணைப்பு வழங்கவில்லை. தற்சமயம் புதிய குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது.

- சேலம் மாவட்டத்திலுள்ள மாநகராட்சி, தாரமங்கலம் நகராட்சி மற்றும் சங்ககிரி பேரூராட்சியில் பிளம்பர் உரிமம் பெற்று பணிகள் செய்து வரும் மனுதாரர் திருப்பூர் மாவட்டத்திலுள்ள குன்னத்தூர் பேரூராட்சியில் குடிநீர் இணைப்பு பணிகள் மற்றும் பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொள்ள பிளம்பர் உரிமம் கோரியுள்ளார்.

- குன்னத்தூர் பேரூராட்சி மன்றத்தில் உள்ளூரில் உள்ள குடிநீர் பராமரிப்பு பணி செய்து வரும் பணியாளர்கள் மூலம் குடிநீர் இணைப்புகள் வழங்கலாம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

- கடந்த 15 வருடங்களாக, குன்னத்தூர் பேரூராட்சியில் எந்த ஒரு நபருக்கும் பிளம்பர் உரிமம் குன்னத்தூர் பேரூராட்சி மூலம் வழங்கப்படவில்லை.

- வெளி மாவட்டத்தில் மனுதாரர் வசிப்பதால், பொதுமக்கள் தங்களது குடிநீர் பழுதுபார்ப்பு பணிகளுக்கு உடனடியாக தொடர்பு கொள்ள முடியாமல் பொதுமக்களின் குறைகள் நிவர்த்தி செய்ய இயலாத சூழ்நிலை ஏற்படும்.

- மேற்காணும் சூழ்நிலையில் மனுதாரருக்கு பிளம்பர் உரிமம் வழங்கப்படாததால் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக புகாராக தெரிவித்துள்ளார் என்பதனை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

8. மனுதாரர் திரு. R துரைசாமி என்பவரின் புகார்மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான குன்னத்தூர் செயல் அலுவலரின் அறிக்கைகள் மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் தனது 15.10.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் தான் சேலம் மாநகராட்சி, தாரமங்கலம் நகராட்சி மற்றும் சங்ககிரி பேரூராட்சிகளில் பிளம்பர் உரிமம் பெற்று, புதிய குடிநீர் இணைப்பு பணிகள் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்து வரும் நிலையில். திருப்பூர் மாவட்டம், குன்னத்தூர் பேரூராட்சியில் மேற்காணும் பணிகளை மேற்கொள்ள பிளம்பர் உரிமம் கோரியதில், குன்னத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் பிளம்பர் உரிமத்தை வழங்க மறுத்துள்ளார் என புகாராக தெரிவித்து, நகராட்சி நிர்வாக ஆணையரின் 14.02.2006 நாளிட்ட Roc எண். 7194/2002/WS2-ல் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின்படி, குன்னத்தூர் பேரூராட்சியில் பிளம்பர் உரிமம் வழங்க ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

அரசாணை (நிலை) எண். 287, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 05.11.1996-ல் பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் வீடுகளுக்கு குடிநீர் குழாய்கள் இணைப்பதற்கு பொதுமக்கள் தாங்கள் விரும்பும் நபர்கள் மூலம் இச்சேவைகளை நிறைவேற்றிட ஆணை வெளியிடப்பட்டு, இந்நடைமுறை சோதனை அடிப்படையில் 1 ஆண்டு காலம் செயல்படுத்தி அதன் அடிப்படையில் இம்முறையை தொடரலாம் என ஆணையிடப்பட்டது. இவ்வாணையை எதிர்த்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ்நாடு பிளம்பர்கள் சங்கத்தால் தொடரப்பட்ட வழக்கில் (W.M.P.No. 26488 of 1996 in W.P. No.18855 of 1996)

16.12.1996 நாளிட்ட ஆணையில் மேற்காணும் அரசாணைக்கு இடைக்கால தடை ஆணை (Interim Stay) வழங்கி உத்தரவிடப்பட்டது.

இதற்கிடையில் நகராட்சி நிர்வாக ஆணையரின் 14.02.2006 நாளிட்ட சுற்றறிக்கை Roc எண். 7194/2002/WS2-ல் பிறவற்றுள், நுகர்வோர் விருப்பப்படும் தகுதிப்பெற்ற பிளம்பர்களை தேர்ந்தெடுத்து குடிநீர் குழாய் இணைப்பு பணிகள் செய்யலாம் என சுற்றறிக்கையில் அறிவுரைகள் வழங்கப்பட்டது.

இந்நிலையில் தமிழ்நாடு பிளம்பர்கள் சங்கத்தால் தொடரப்பட்ட வழக்கில் (W.P. No.18855 of 1996 and W.M.P. No. 26488 of 1996 ) மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் தனது 10.03.2006 நாளிட்ட தீர்ப்புரையில் அரசாணை (நிலை) எண். 287, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 05.11.1996-ல் வெளியிடப்பட்ட ஆணையானது ஒரு வருட காலத்திற்கு மட்டும் சோதனை அடிப்படையில் செயல்படுத்திட வெளியிடப்பட்ட நிலையில் ஒரு வருட காலம் முடிவு பெற்றதால், இவ்வழக்கினை தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டது.

இதனை தொடர்ந்து குன்னத்தூர் பேரூராட்சியில் புதியதாக பிளம்பர் உரிமம் அனுமதி கேட்டு அதிகப்படியான விண்ணப்பங்கள் வருவதால், அனைவருக்கும் புதிய குடிநீர் இணைப்பு பணியினை மேற்கொள்ள மற்றும் பிளம்பர் உரிமம் அனுமதி வழங்க இயலாத சூழ்நிலை இருப்பதால், பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கருத்துக்களின் அடிப்படையிலும் மற்றும் மன்ற உறுப்பினர்களின் ஒருமித்த கருத்துக்களின் அடிப்படையிலும் குடிநீர் குழாய் பழுதுபார்க்கும் பணியில் குடிநீர் வழங்கல் உப விதிகளின்படி பொதுமக்கள் அவர்களது சொந்த செலவில் புதியதாக குடிநீர் இணைப்பு பணியினை செய்து கொள்ளலாம் என உள்ளதால், பொதுமக்களின் சொந்த செலவில் குடிநீர் இணைப்பு பணியினை செய்து முடிக்கலாம் என பேரூராட்சி மன்றத்தினால் முடிவு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது (தீர்மான எண். 179/2025 நாள்:23.12.2025) என்பதையும் மற்றும் இத்தீர்மானத்தின் அடிப்படையில் பேரூராட்சி அலுவலகத்தால் எந்த நபருக்கும் பிளம்பர் உரிமம் வழங்க வழிவகை இல்லாத நிலையில் மனுதாரருக்கும் பிளம்பர் உரிமம் வழங்கப்படவில்லை என்பதையும் பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது. மேலும், கடந்த 15 வருடங்களாக குன்னத்தூர் பேரூராட்சியில் எந்தவொரு நபருக்கும் பிளம்பர் உரிமம் வழங்கப்படவில்லை என்பதை செயல் அலுவலரின் 13.02.2026 நாளிட்ட அறிக்கை ந.க. எண். 188/2026 மூலம் அறிய வருகிறது. இந்நிலையில் குன்னத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்தை ஏற்று, இப்புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்றம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11 -ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. R துரைசாமி,
கல்லப்பாளையம்,
வெள்ளரிவெள்ளி அஞ்சல்,
எடப்பாடி வட்டம்,
சேலம் மாவட்டம் - 637 101.

2) செயல் அலுவலர்,
   குன்னத்தூர் பேரூராட்சி, திருப்பூர் மாவட்டம்.
3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   இராஜா அண்ணாமலைபுரம்,
   எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
   (பெயரிட்ட உறையில்)
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

இகோ/~~உதிரிகள்.~~

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்